மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பல்வேறு நோய்கள் பரவுகின்றன. அதற்குப் பல்வேறு மருந்துகள் தெளிக்கப்படுகின்றது. நெப்பாண்டிக்ஸ் செரிநோப்பா என்று இருக்கின்றன. தடுக்க பாரசை என்ற தடுப்பு பூச்சிகளை விட்டுத் தடுக்கும் முறையிருக்கிறது. அதை அதிகமாக ஆராய்ச்சி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

MR. SPEAKER : Now Government Bills.

(5) நடைமுறைக் கேள்வி

ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அவையில் எடுத்துக் கொள்வது பற்றி.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். ஒற்றி வைப்புத் தீர்மானம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிக் கொடுத்திருக்கிறோம். அதை இப்பொழுது எடுத்துக் கொள்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றி வைப்புத் தீர்மானங்கள் நாளையதினம் எடுத்துக் கொள்ளப்படும். ஒற்றி வைப்புத் தீர்மானத்திற்காக இப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்னை என்று எழுப்புவது முறையல்ல. அதை சபாநாயகர் அறையிலேயே தள்ளிவிடலாம், இங்கேயும் தள்ளிவிடலாம், அதற்கான காரணங்களைச் சொல்லலாம். ஆனால் அதைக் கொண்டுவந்து சபையிலே எழுப்புவது முறையானது அல்ல என்பதைமட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) அரசினர் சட்டமுன்வடிவுகள்

(அ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவை இப்பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(7) 1971–72-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 16—வேளாண்மை

(ஆ) கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை @ என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,87,83,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இரண்டாவது போக சாகுபடிக்கு பயன்படுத்தும் மின்சாரக் கட்டணத்திலிருந்து விலக்களிக்க வேண்டிய அவசியத்தைச் சுட்டிக் காட்ட—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,87,83,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இடங்களுக்கேற்ற வகையில் திட்டங்களமைத்துச் செயல்பட வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,87,83,100-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : To discuss the hazards involved in agricultural operation for the ryots in Cauvery delta as a result of construction of dam across Hemavathi, Kabini etc., I move the following cut motion :—

"That the allotment of Rs. 18,87,83,100 under Demand No. 16 Agriculture be reduced by Rs. 100."

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து ஏக்கருக்குக் குறைவான நிலமுள்ள விவசாயிகளில் 10 குடும்பங்களை எடுத்து மாதிரிப் பண்ணை நடத்திக் காண்பிக்க திட்டமிட வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—

@ வேளாண்மைக் கோரிக்கை பற்றிய குறிப்பு மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.